தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வேலூரில் 105 டிகிரி வெயில்

**சென்னை,**

First Published : 20 April 2014 09:01 PM IST

தமிழகத்தில் அதிகபட்சமாக வேலூரில் ஞாயிற்றுக்கிழமை (ஏப். 20) 105 டிகிரி வெயில் பதிவானது. இதேபோல, தருமபுரி, கரூர் பரமத்தி, மதுரை, பாளையங்கோட்டை, சேலம், திருச்சி ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது.

### மீன் வரத்து அதிகமானதால் நாட்டுப்படகு மீனவர்கள் மகிழ்ச்சி

**ராமேசுவரம்,**

மீன்வரத்து அதிகமாக இருப்பதால் நாட்டுப்படகு மீனவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மீன் இனப்பெருக்கத்திற்காக விசைப்படகுகள் கடலுக்குச் செல்ல 45 நாள்களுக்கு அரசு தடைவிதித்துள்ளது. விசைப்படகு மீனவர்கள் செல்லாததால் ஆழ்கடல் பகுதியிலிருந்து மீன்கள் கரையோர கடல் பகுதிகளுக்கு சுதந்திரமாக வந்து செல்கின்றன.

கரையிலிருந்து 3 நாட்டிக்கல் மைல் தூரத்துக்குள் மீன்பிடிக்கச் சென்று வரும் நாட்டுப் படகு மீனவர்களுக்கு கடந்த ஒரு வாரமாக மீன்கள் அதிகமாக கிடைத்து வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை காலையில் பாம்பன் பகுதியிலிருந்து 100க்கு மேற்பட்ட நாட்டு படகுகளில் மீனவர்கள் தென் கடல் பகுதிக்கு சென்றனர். வழியிலேயே மீன்கள் அதிகமாக காணப்பட்டதால் வலைகளை விரித்து போதுமான மீன்களை பிடித்துக்கொண்டு சனிக்கிழமை காலை கரை திரும்பினர்.

ஒரு வாரம் ஆழ்கடலில் தங்கி கிடைக்கும் அளவிற்கு ஒரு நாளிலேயே சூடை மீன், பேசாளை மீன், போன்ற பல வகை மீன்கள் கிடைத்துள்ளன.

மேலும் குறைவான செலவீனத்தில் அதிக லாபம் கிடைத்ததால் மீனவர்கள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதனால் பாம்பன் மீன் ஏல மார்க்கெட் பகுதியில் வியாபாரிகள் மற்றும் மீனவர்களின் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

**பல்லடம் கறிக்கோழி கொள்முதல் விலையில் மாற்றமில்லை**

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

வெள்ளிக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.75-ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் சனிக்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

**குன்னூரில் சாரல் மழை**

**குன்னூர்,**

குன்னூரில் சனிக்கிழமை சாரல் மழைப் பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த 5 மாதங்களாக வறண்ட சீதோஷ்ணநிலை நிலவியது.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை மதியம் லேசான சாரல் மழை பெய்தது. சனிக்கிழமையும் சாரல் மழை தொடர்ந்தது.

மழைக் காரணமாக நிலத்தின் ஈரப்பதம் அதிகரிக்கும் என்பதால், கோஸ், கேரட், உருளை கிழங்கினை விவசாயிகள் பயிரிட துவங்கியுள்ளனர்.

**நத்தம் பகுதியில் கடும் வறட்சி: வெப்பத்தால் உதிரும் மாம்பிஞ்சுகள்**

**நத்தம்,**

திண்டுக்கல் மாவட்டத்தில் நத்தம் பகுதியில் அதிக அளவு மா சாகுபடி செய்யப்படுகிறது. இதில் நத்தம் மற்றும் சாணார்பட்டி யூனியன் பகுதிகளில் சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் மா பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு முதல் தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை சரிவர பெய்யாமல் பொய்த்து விட்டது. இதனால் கடும் வறட்சி ஏற்பட்டு கடந்த 4 மாதங்களாக மழை ஏதும் பெய்யாமல் வெப்பம் நிலவி வந்தது. இதனால் மா மரங்களுக்கு தேவையான நீர்ச்சத்து கிடைக்கவில்லை. இதையொட்டி பல விவசாயிகள் ஆங்காங்கே ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து அதன் மூலம் கிடைக்கும் சிறிதளவு நீரைக் கொண்டு மா மரங்களை காப்பாற்றும் நிலை ஏற்பட்டுள்ளது. இது தவிர டாங்கர் பொருத்தப்பட்ட லாரி, டிராக்டர்கள் மூலம் தண்ணீரை விலைக்கு வாங்கி மரங்களை காப்பாற்றி வருகின்றனர். இதில் பல இடங்களில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் போது தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் ஏமாற்றத்தையே கண்டனர்.

இந்நிலையில் கடந்த பிப்ரவரி மாதம் மா மரங்கள் பூப்பூக்கத் தொடங்கின. இதில் மார்ச் மாதத்தில் வெயிலையும் தாக்குப் பிடித்து அதையும் மீறி பிஞ்சுகள் பிடித்தன. அப்போது பூமியில் போதுமான ஈரம் இல்லாத காரணத்தினாலும் மழையில்லாத வறட்சியினாலும் மா மரங்களிலிருந்து பிஞ்சுகள் கொத்துக் கொத்தாக உதிர்கின்றன. நத்தம் பகுதியில் உள்ள வத்திப்பட்டி, லிங்கவாடி, காசம்பட்டி, குட்டுப்பட்டி, செந்துறை, சிறுகுடி, மணக்காட்டூர், வேம்பார்பட்டி, கோபால்பட்டி, அதிகாரிபட்டி, மலைக்கேணி, சிலுவத்தூர் உள்ளிட்ட பல கிராமப் பகுதிகளிலிருந்து மாம்பிஞ்சுகள் மூடை மூடையாக சேகரிக்கப்பட்டு நத்தம், வத்திப்பட்டி. கோபால்பட்டி மற்றும் செந்துறை போன்ற பகுதிகளில் விற்பனைக்காக குவிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிக மாம்பிஞ்சுகள் வரத்துள்ளதாக சீரங்கம்பட்டியைச் சேர்ந்த வியாபாரி ஹமீது தெரிவித்தார். இதுகுறித்து அவர் கூறியதாவது: ஒரு கிலோ மாம்பிஞ்சு ரூ.5 முதல் ரூ.6 வரை விற்பனையாகிறது. இவைகள் மூடை மூடையாக லாரி மற்றும் வேன்களில் திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, கும்பகோணம் போன்ற வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன என்று கூறினார்.

மேலும் நத்தம் தொகுதி தென்னை, மாமர, பழப்பண்ணை அமைப்புக்குழு தலைவர் வேம்பார்பட்டி கண்ணுமுகமது இது குறித்து கூறியதாவது: நத்தம் வட்டாரத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மாந்தோப்புகள் உள்ளன. வறட்சியின் காரணமாக இந்த ஆண்டு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் விளைச்சல் பெற்று அறுவடையாகக் கூடிய கல்லாமை ரக மாங்காய்கள் முழுவிளைச்சல் பெறாமல் வெப்பம் தாங்க முடியாமல் மரங்களிலிருந்து மாம்பிஞ்சுகளாக உதிர்கின்றன. இதனால் விவசாயிகளுக்கு சுமார் பல கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இயற்கை மாற்றங்களினால் மா விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் வரும் காலங்களில் கோடை மழை பெய்தால் இருக்கக் கூடிய மாங்காய்களில் நீர்ச்சத்து கூடி தடிமனாக வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மதுரை, வேலூர், திருச்சியில் அனல் : நீலகிரியில் கொட்டியது மழை**

**சென்னை** : தமிழகத்தில், கடந்த இரு தினங்களாக, பல பகுதிகளில் மழையும், மதுரை, வேலூர், திருச்சியில், அதிகபட்ச வெப்பநிலையும் பதிவாகி உள்ளது. வெப்பச் சலனம் மற்றும் காற்று மேலடுக்கு சுழற்சி காரணமாக, கடந்த இரு வாரங்களாக, தெற்கு மற்றும் மேற்கு தமிழக பகுதிகளில், ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இதில், 19ம் தேதி காலை நிலவரப்படி, அதிகபட்சமாக, நீலகிரி மாவட்டம், கேட்டி பகுதி யில், 8 செ.மீ., மழை பதிவாகியது. நீலகிரி - ஜி.பஜார், ஊட்டி மற்றும் கிருஷ்ணகிரி - அஞ்சட்டி, தளி பகுதிகளில் 2 செ.மீ., கன்னியாகுமரி - பேச்சிப்பாறையில் 1 செ.மீ., மழை பதிவாகியது. நேற்று காலை நிலவரப்படி, நீலகிரி மாவட்டம், குந்தா பாலம் பகுதி யில், 3 செ.மீ., மழை பதிவாகியது. மேலும், "இன்னும், மூன்று தினங்களுக்கு, இந்த மழை நீடிக்கும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

அனல் அதிகரிப்பு : ஒரு புறம், சில இடங்களில் கோடை மழை பதிவாகி வரும் நிலையில், மதுரை, திருச்சி மற்றும் தமிழகத்தின் வடக்கு பகுதிகள், கோடை வெப்பத்தில் தகித்து வருகின்றன.

நேற்று முன்தினம், காலை நிலவரப்படி, அதிகபட்சமாக திருச்சி மற்றும் மதுரையில், 41 டிகிரி செல்சியஸ் (105.8 டிகிரி பாரன்ஹீட்) வெப்பம் பதிவாகியது. வேலூர், பாளையங்கோட்டை, திருப்பத்தூரில், 40 (104 டிகிரி), தர்மபுரி, சேலம், தஞ்சை, திருத்தணியில், 39 டிகிரி செல்சியஸ் (102.2 டிகிரி பாரன்ஹீட்) வெப்பமும் பதிவாகியது.

நேற்று காலை நிலவரப்படி, சற்றே வெப்பம் தணிந்துள்ளது. மதுரை, சேலம், திருச்சியில், 40 டிகிரி செல்சியஸ் (104 டிகிரி பாரன்ஹீட்) மற்றும் தர்மபுரி, பாளையங்கோட்டை, திருத்தணியில், 39 டிகிரி (102.2 டிகிரி பாரன்ஹீட்) வெப்பம் பதிவாகியது.

சென்னையில், கடந்த சில தினங்களாக, 35 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகி வருகிறது. அனல் காற்றின் தாக்கம் குறைந்துள்ள போதும், இரவில் வெப்பம் அதிகரித்து உள்ளது.

## குஜராத், மேற்கு வங்கத்திலிருந்து நெல் வரத்து அதிகரிப்பு

**திருப்பூர்** : குஜராத், மேற்கு வங்கம், ம.பி., உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு நெல் வரத்து அதிகரித்துள்ளது. காவிரி டெல்டா பகுதிகளை முழுமையாக நம்பியிருந்த அரிசி ஆலை உரிமையாளர்கள், மேட்டூர் அணையில் இருந்து நீர்வரத்து குறைந்து, பாசனப் பகுதி சுருங்கியதால், கர்நாடகா மற்றும் ஆந்திராவில் இருந்து நெல் வாங்கினர். கர்நாடக மாநிலத்திற்கு சென்று வரும் லாரிகள், கட்டாயம், "பர்மிட்' பெற வேண்டும் என, ஆந்திர மாநில அரசு கட்டாயப்படுத்தியதால், அங்கிருந்து நெல் கொண்டு வருவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால், தமிழகத்திற்கு நெல் வரத்து குறைந்து, அரிசி விலை உயர்ந்தது. அருகில் உள்ள ஆந்திராவை மட்டுமே முழுமையாக நம்பியிருக்க முடியாது என கருதி, அரிசி ஆலை உரிமையாளர்கள், மேற்கு வங்கம், ம.பி., குஜராத்தில் இருந்து, நெல் வாங்கத் துவங்கினர்.

இதனால், ஆறு மாதமாக அரிசி விலை உயரவில்லை. குஜராத், மேற்கு வங்கத்தில் மழையளவு அதிகரித்து விளைச்சல் உயர்ந்துள்ளதால், தமிழகத்திற்கு நெல் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விலையும் கட்டுக்குள் உள்ளது.

## 400 மூட்டை மஞ்சள் ரூ. 60 லட்சத்துக்கு ஏலம்

**ஆத்தூர்**: ஆத்தூர், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 400 மூட்டை மஞ்சள், 60 லட்சம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு, 600 விவசாயிகள், 1,400 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 6, 500 ரூபாய், அதிகபட்சம், 8, 500 ரூபாய், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 6, 400 ரூபாய், அதிகபட்சம், 7, 300 ரூபாய், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 7,900 ரூபாய், அதிகபட்சம், 14, 400 ரூபாய்க்கு விற்பனையானது. ஏலத்தில், 20 வியாபாரிகள் கலந்து கொண்டு, 1,400 மூட்டை மஞ்சளை, 60 லட்சம் ரூபாய்க்கு வாங்கி சென்றனர்.

## ரிஷிவந்தியம் பகுதியில் நுங்கு விளைச்சல் அமோகம்

**ரிஷிவந்தியம்**: ரிஷிவந்தியம் பகுதியில் உள்ள கிராமங்களில் நுங்கு விளைச்சல் அமோகமாக உள்ளது. கோடைக்காலத்தில் பொதுமக்கள் குளிர்ச்சி தரும் வகையில் உள்ள பழங்கள் மற்றும் குளிர் பானங்களை அதிகளவு விரும்புகின்றனர். சந்தைகள் மற்றும் தெருக்களில் தர்பூசணி, வெள்ளரி, இளநீர் போன்றவற்றின் விற்பனை சூடுபிடித்துள்ளது. வெயிலின் தாக்கத்தை தணிக்க பொதுமக்கள் குளிர் பானங்களை அருந்தி வருகின்றனர். இவைகளுக்கு போட்டியாக தற்போது நுங்கு விற்பனை துவங்க உள்ளது. ரிஷிவந்தியம் பகுதியில் உள்ள கிராமங்களில் நுங்கு விளைச்சல் அமோகமாக உள்ளது.சில நாட்களில் இதன் விற்பனையும் தொடங்கி விடும் என்பதால் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பச்சை மிளகாய் விலை "காரம்'

**திருப்பூர்** : வெளியூர்களில் இருந்து வரத்து குறைந்ததால், திருப்பூரில், பச்சை மிளகாய் விலை, கிலோ 80 ரூபாயாக உயர்ந்துள்ளது.தென்னம்பாளையம் மார்க்கெட், வடக்கு, தெற்கு உழவர் சந்தைகளுக்கு, ஒட்டன்சத்திரம், தாராபுரம், தொரவலூர், குன்னத்தூர், தாளவாடி பகுதிகளில் இருந்து விவசாயிகள், வியாபாரிகள், பச்சை மிளகாயை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். வழக்கமாக வரத்து சீராக இருப்பதால், மற்ற காய்கறிகள் விலை உயர்ந்தபோதும், பச்சை மிளகாய் விலை குறைவாகவே இருக்கும்.தற்போது கோடை வெயில் சுட்டெரிக்கத் துவங்கியுள்ளது. பெரும்பாலான பகுதிகள் வறட்சியடைந்துள்ள நிலையில், வெயில் தாக்கத்தால், மிள காய் செடிகளில் பூ உதிர்வது, பிஞ்சு பருவத்திலேயே பழுத்து வீணாவது அதிகரித்துள்ளது. கடந்த ஒரு வாரமாக திருப்பூருக்கு, வெளியூர்களில் இருந்து பச்சை மிளகாய் வரத்து பாதியாக குறைந்துள்ளது.அதனால், விலை உச்சத்தை தொட்டுள்ளது. மொத்த விற்பனையில் ஒரு கிலோ ரூ.75க்கும்; சில்லரையில் 80க்கும் விற்கப்படுகிறது. வெயில் தாக்கம் குறைந்த பின்னரே, மீண்டும் பிச்சை மிளகாய் விலை சீராகும் என்கின்றனர், வியாபாரிகள்.

## முதுமலையில் தர்பூசணி விளைச்சல்

**கூடலூர்** : நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகம், முதுகுழி பகுதியை சேர்ந்த சுரேஷ் என்ற விவசாயி, முதல் முறையாக தர்பூசணி செடிகளை பயிரிட்டார். தற்போது அந்த செடிகளில் காய்த்துள்ள சுவையான தர்பூசணி பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. இது குறித்து விவசாயிகள் கூறுகையில், "இப்பகுதியில் வரும் நாட்களில் தர்பூசணியை அதிகளவில் விளைவிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அரசும் உதவி செய்தால் நல்ல லாபம் கிடைக்கும்' என்றனர்.

## பூக்கள் விலை வீழ்ச்சி

**திண்டுக்கல்** : விசேஷ நாட்கள் இல்லாததால், பூக்கள் வாங்குவதில் வியாபாரிகள் ஆர்வம் காட்டாததால், விலை குறைந்துள்ளது.விசேஷ நாட்கள் இல்லாததால், திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் நேற்று அனைத்து வகையான பூக்களின் விலையில்

வீழ்ச்சி ஏற்பட்டது. கடந்த வாரம் கிலோ ரூ. 350 க்கு விற்கப்பட்ட மல்லிகை, முல்லை பூக்கள் ரூ. 100 மற்றும் ரூ. 130க்கும் விற்கப்பட்டது. ரூ. 200 க்கு விற்கப்பட்ட அரளி ரூ. 30 க்கும், ரூ. 250 க்கு விற்கப்பட்ட சம்பங்கி ரூ.40 க்கும், ரூ. 70 க்கு விற்கப்பட்ட கோழி கொண்டை ரூ.30 க் கும், ரூ. 400 க்கு விற்கப்பட்ட செண்டு மல்லி ரூ. 150 க்கும், ரூ. 400 க்கு விற்கப்பட்ட காக்கரட்டான் ரூ. 150 க்கும் விற்கப்பட்டது.

## சிறுதானிய உற்பத்தி ஊக்குவிப்பு; மானியத்தில் விதை வழங்க முடிவு

**திண்டுக்கல்** : சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, அவற்றை விளைவிக்கும் விவசாயிகளுக்கு விதைகள், இடுபொருட்களை மானியத்தில் வழங்க வேளாண்மை துறை முடிவு செய்துள்ளது.

மூதாதையர்கள் கடைபிடித்த உணவு பழக்க வழக்கங்களை தற்போதைய தலைமுறையினர் பின்பற்றுவதில்லை. இருப்பினும், அதே உணவுகள், தெருஓர தள்ளு வண்டிகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

கம்மங்கூழ் உட்பட அனைத்து வகையான கூழ்களையும், வெட்கப்படாமல் காசு கொடுத்து வாங்கி குடிப்பதை பலர் வழக்கமாக கொண்டுள்ளனர்.கூழ் வகைகளுக்கு பெருகிவரும் ஆதரவினால் தற்போது பிரபலமான ஓட்டல்களிலும் இதே உணவுகள் இடம்பெறத்துவங்கியுள்ளன. உடலில் பாதிப்புகளை ஏற்படுத்தும் கொழுப்பு, சர்க்கரையை கட்டுப்படுத்தும் ஆற்றல் சிறுதானியங்களுக்கு உண்டு.

இவற்றை உற்பத்தி செய்து வந்த விவசாயிகள், நிர்ணயிக்கப்பட்ட விலை கிடைக்காததால், தொடர்ந்து விளைவிப்பதில் ஆர்வமில்லாமல் உள்ளனர்.

சிறுதானியங்களுக்கான தேவை தற்போது அதிகரித்து வருவதால், அவற்றை உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க வேளாண்மை துறை முடிவு செய்துள்ளது. வரகு, திணை, குதிரை வாலி, சாமை, சோளம், கம்பு, ராகியை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேவையான விதைகள், இடுபொருட்கள் மானியத்தில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### விதை முளைப்புத்திறன் பரிசோதனை

**தேனி** : தேனி அன்னஞ்சி விலக்கில், அனுக்கிரஹா நகரில் விதைப்பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்கள் கைவசம் உள்ள விதைகளின் விதைப்பு திறன் அறிந்து, விதைப்பு செய்வதால், சாகுபடி செலவை குறைப்பதுடன் அதிக மகசூலை பெறலாம். அதன் மூலம் அதிக வருவாயை ஈட்டலாம். விதை பரிசோதனை கட்டணம் 30 ரூபாய் மட்டுமே செலுத்தி, விதைகளின் முளைப்புதிறன் அறிந்து, விதைப்பு செய்ய வேண்டும், என விவசாயிகளுக்கு தேனி விதை பரிசோதனை அலுவலர் அறிவுறுத்தி உள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

### வரத்து குறைந்ததால் ஆப்பிள் விலை உயர்வு



**சேலம்**: காஷ்மீர், இமாசல மாநிலம் உள்ளிட்ட பகுதிகளில் ஆண்டுதோறும் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பரில் ஆப்பிள் விளைச்சல் அமோகமாக இருக்கும். தற்போது ஆப்பிள் விளைச்சல் கடுமையாக பாதித்துள்ளது. இதனால் மார்க்கெட்டுக்கு குறைந்தளவே ஆப்பிள் வந்து கொண்டிருக்கிறது. இதனால் ஆப்பிளின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இது குறித்து சேலம் கடைவீதி பழ வியாபாரிகள் கூறியதாவது: தற்போது காஷ்மீர், இமாசல மாநிலம், டெல்லியில் ஆப்பிள் சீசன் இல்லாததால், வரத்து பாதியாக குறைந்துள்ளது.

அங்கிருந்து சேலம் மார்க்கெட்டுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு டன் மட்டுமே ஆப்பிள் வந்து கொண்டிருந்தன. இங்கு வரும் ஆப்பிள் நாமக்கல், தர்மபுரி, ஈரோடு, மேட்டூர், ஆத்தூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஆப்பிள் வரத்து குறைந்துள்ளதால், அதன் விலை அதிகரித்துள்ளது. இதனால் தற்போது, ஒரு கிலோ ஆப்பிள் ரூ.180 முதல் ரூ.200 என விற்பனை செய்கிறோம்.

**அதிக பட்ச விலை உர நிறுவனங்களுக்கு அழைப்பு**



**புதுடெல்லி:** பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரம் தயாரிக்கும் நிறுவனங்கள், மானிய விலையிலான உரங்களுக்கு அவற்றின் தர குறியீட்டுக்கு ஏற்ப நியாயமான அதிகபட்ச சில்லரை விலையை நிரணயித்துக்கொள்ள உர அமைச்சகம் அனுமதி அளித்திருந்தது. விலை நியாயமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யும் வகையில், புதிய விலை பட்டியலை அனுப்பிவைக்கும்படி அரசு கேட்டுக்கொண்டிருந்தது. விலை விவரத்தை சமர்ப்பிப்பதில் நிறுவனங்கள் தாமதம் செய்வதால், இதுகுறித்து விவாதிக்க அடுத்த மாத துவக்கத்தில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உர அமைச்சகம் அழைப்பு விடுத்துள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

### கம்மாபுரம் பகுதியில் பச்சை மிளகாய் விளைச்சல் அமோகம்



கம்மாபுரம் பகுதியில் பச்சைமிளகாய் அமோகமாக விளைந்துள்ளது. ஆனால் போதிய விலை இல்லாத காரணத்தினால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மிளகாய் விளைச்சல்

கம்மாபுரம் பகுதியில் மணிமுக்தாறு, வெள்ளாறு ஆகிய இரண்டு நதிகள் செல்வதால் இப்பகுதியில் மணல் கலந்த வண்டல் மண் அதிக அளவில் காணப்படுகிறது. இந்த மண் காய்கறி பயிர்கள் பயிரிட ஏற்ற மண் என்பதால் விவசாயிகள் அதிகளவில் வெண்டை, கத்தரி, பாகற்காய், புடலங்காய், பச்சை மிளகாய் மற்றும் மலர் வகை பயிர்களை அதிகம் சாகுபடி செய்து வருகின்றனர்.

அதன்படி, கம்மாபுரம் பகுதியில் தற்போது பச்சைமிளகாய் விளைச்சல் அதிகமாக உள்ளது. ஆனால், அதற்கு போதிய விலை இல்லாததால் விவசாயிகள் கவலை அடைந்து வருகின்றனர்.

இதுகுறித்து தே.பவழங்குடியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில், எங்கள் பகுதியில் சுழற்சி முறையில் பயிர் செய்வது வழக்கம். தற்போது எனது வயலில் பச்சை மிளகாய் பயிர் செய்துள்ளேன். தற்போது பச்சை மிளகாய் விளைச்சல்

அமோகமாக உள்ளது. ஆனால் போதிய விலை இல்லாத காரணத்தினால் நாங்கள் மிகவும் கவலை அடைந்துள்ளோம். விருத்தாசலம், ஸ்ரீமுஷ்ணம் சந்தை பகுதிகளில் பச்சை மிளகாயை குறைந்த விலைக்கு வியாபாரிகள் கொள்முதல் செய்வதால், மிளகாய் சாகுபடி செய்த தொகையை கூட எடுக்க முடியாத அவல நிலைக்கு இப்பகுதி விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர் என்று கவலையுடன் அவர் தெரிவித்தார்.

**விருத்தாசலம் பகுதியில் சொர்ணாவாரி பட்டம் நடவு ஆரம்பம்**



விருத்தாசலம் பகுதியில் சொர்ணாவாரி பட்டம் நடவு பணிகளை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர். ஆனால் மின் பற்றாக்குறையால் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர்.

நெல் நடவு ஆரம்பம்

விருத்தாசலம் அருகில் உள்ள கோ. மாவிடந்தல், கோபாலபுரம், ஆதனூர், ஆலிச்சிக்குடி, இளமங்களம் போன்ற பல்வேறு கிராமங்களில் தற்போது சம்பா அறுவடை முடிந்து சொர்ணாவாரி பட்டத்திற்கான நெல் நடவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கென விவசாயிகள் ஆங்காங்கே தங்களது விவசாய விளை நிலங்களை தயார் செய்து நாற்று விட்டு நடவு நடும் பணியை ஆரம்பித்துள்ளனர். ஏப்ரல், மே மாத பட்டமான சொர்ணாவாரி பட்டத்திற்கு எ.டி.டி. 43, 45 போன்ற நெல் ரகங்களை தேர்வு செய்து நாற்று விட்டு நடவு செய்து வருகின்றனர். தற்போது விருத்தாசலத்தை சுற்றியுள்ள பகுதி கிராமங்களில் ஒரு

நாளைக்கு 3 மணி நேரங்கள் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

மின் பற்றாக்குறை

இந்த மின்சாரம் விவசாயம் செய்வதற்கு போதுமானதாக இல்லாத காரணத்தினால் மின்மோட்டார்கள் இல்லாத விவசாயிகள், பணம் கொடுத்து தண்ணீர் பாசனம் செய்யக்கூடிய சிறு, குறு விவசாயிகள் தங்களது விளை நிலங்களை பயிரிடாமல் தரிசாக போட்டுள்ளனர். அதிக நிலங்களை வைத்திருக்கக்கூடிய விவசாயிகளும் ஒரு சில ஏக்கர் மட்டுமே பயிர் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

கோ.மாவிடந்தல் கிராமத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில், 1 ஏக்கர் நெல் பயிரிட்ட வயலுக்கு தண்ணீர் பாசனம் செய்ய குறைந்தது 5 மணி நேரம் மின்சாரம் தேவை. ஆனால் ஒரு நாளைக்கு 3 மணி நேரம் மின்சாரம் என்றால் ஒரு ஏக்கரில் தண்ணீர் பாய்வதற்குள் மின் தடை ஏற்பட்டு விடுகிறது. மீண்டும் மின்சாரம் வந்து தண்ணீர் பாசனம் செய்யும் போது பாய்ந்த இடத்தில் மட்டுமே பாய்கிறது. மீதி இடங்களில் பாய்வதற்குள் மின்தடை ஏற்பட்டால் எப்படி விவசாயம் செய்ய முடியும். மும்முனை மின்சாரம் கொடுக்கக்கூடிய நேரங்களையும் மின்சார வாரியம் சரியாக கூறுவது கிடையாது.

விவசாயிகள் கவலை

இதனால் எங்கள் குழந்தைகள், குடும்பங்களை விட்டு விட்டு இரவு, பகல் பாராமல் விவசாய விளை நிலங்களிலேயே எப்போது மின்சாரம் வரும் என வழி மேல் விழி வைத்து பார்த்து கொண்டிருக்கவேண்டிய கட்டாய நிலை ஏற்ட்டுள்ளது. விவசாயிகளாக வாழ்வதால் மற்ற வேலைகளை கூட பார்க்க முடியவில்லை. உழவன் கணக்கு பார்த்தால் வரவை விட செலவுதான் அதிகம் வருகின்ற இக்காலத்தில் மின்சாரத்தால் மகசூல் குறைகிறதே என்பதே இப்பகுதி விவசாயிகளின் கவலையாக உள்ளது. பல விவசாயிகள் தங்கள் விளைநிலங்களை தரிசு நிலங்களாக மாற்றி விட்டனர்.

இதே நிலை நீடித்தால் நிலங்களை விற்று விட்டு வீட்டிற்கு செல்ல வேண்டிய நிலைதான் மிஞ்சும் என கவலையுடன் அவர் தெரிவித்தார். இதனால் தமிழக

அரசும், மின்சார வாரியமும் விவசாயம் செய்வதற்காகவாவது மின்சாரத்தை கொடுத்து, மும்முனை மின்சாரம் வழங்கக்கூடிய நேரத்தையும் விவசாயிகளுக்கு அறிவிக்க வேண்டும் என்பதே இப்பகுதி விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தேர்தல்: ஏப்ரல் 24-ம் தேதி கோயம்பேடு சந்தைக்கு விடுமுறை



நாடாளுமன்ற தேர்தலில் கோயம் பேடு சந்தை வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் வாக்களிக்க வசதியாக அன்றைய தினம் சென்னை- கோயம்பேடு சந்தைக்கு விடுமுறை அளிக்கப்ப டுவதாக வியாபாரிகள் சங்கங்கள் அறிவித்துள்ளன.

இதுகுறித்து, சென்னை- கோயம்பேடு சந்தை வியாபாரிகள் சங்கங்களின் ஆலோசகர் வி.ஆர். சவுந்தரராஜன் தெரிவித்ததாவது:

கோயம்பேடு சந்தையில் 4 ஆயிரம் காய்கறி அங்காடிகள், 2 ஆயிரம் பழக்கடைகள் மற்றும் பூக்கடைகள் என 6 ஆயிரம் கடைகள் உள்ளன. இந்த கடை களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர் களில், கணிசமானோர் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

இந்நிலையில், தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் வாக்குப் பதிவு வரும் 24-ம் தேதி நடைபெற உள்ளது. எனவே, கோயம்பேடு சந்தை வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள், தேர்தலில் வாக்களிப்பதற்கு வசதியாக, தேர்தல் நாளில் கோயம்பேடு சந்தைக்கு விடுமுறை அளிக்க கோயம்பேடு சந்தை வியாபாரிகள் சங்கங்கள் அறிவித்துள்ளன.

## மானியத்தை உயர்த்த மீனவர் சங்கம் கோரிக்கை

மீன்பிடித் தடைக் காலத்தில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூ.2 ஆயிரம் மானியத்தை ரூ.10 ஆயிரமாக உயர்த்தித் தர வேண்டும் என, மீனவர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து, திருவள்ளூர் மாவட்ட பாரம்பரிய ஐக்கிய மீனவர் சங்கம் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

மீன்பிடி தடைக்காலத்தில் தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் உள்ள 15 ஆயிரம் விசைப்படகுகள் மற்றும் சுமார் 60 லட்சம் மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் வேலை இழக்கின்றனர்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சுமார் ஆயிரம் படகுகள் கடலுக்குச் செல்லவில்லை. ஏப்ரல் 15-ம் தேதி முதல் மே மாதம் 29-ம் தேதிவரை மீன்பிடிக்க தடை விதிக்கப்படும் காலத்தில், மேற்கண்ட மாவட்டங்களில் நாள் ஒன்றுக்கு 100 முதல் 120 டன்கள் வரை மீன்கள் பிடிக்கப்படும்.

மீன்பிடி தடைக் காலத்தில் மீனவர்களின் நலனுக்காக தமிழக அரசு ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.2 ஆயிரம் மானியமாக வழங்குகிறது. இது மீனவர்களின் குடும்பத் தேவைக்கு போதுமானதாக இல்லை. இத்தொகையை ரூ.10 ஆயிரமாக உயர்த்தி தர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கும் நிவாரண உதவி வழங்க வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.